Adda247 GET IT ON Google Play

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**OMR Sheet No. :** ..............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ____________________

(In words)

**Test Booklet No.**

**J—2608**

**PAPER—II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered in the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ● (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ● (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

# Test Prime

***ALL EXAMS, ONE SUBSCRIPTION***

**70,000+** Mock Tests

Personalised Report Card

Unlimited Re-Attempt

**600+** Exam Covered

Previous Year Papers

**500%** Refund

IBPS

NABARD

**ATTEMPT FREE MOCK NOW**

Adda247 GET IT ON Google Play

# TAMIL
## PAPER – II

**Note :** This paper contains **fifty** (50) multiple-choice questions, each question carrying **two** (2) marks. Attempt all of them.

**குறிப்பு :** இந்த வினாத்தாளில் ஐம்பது (50) விடை தெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிப்பெண்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** ஆற்றுப் படையுள் ஒன்று

(A) குறிஞ்சிப்பாட்டு

(B) பட்டினப்பாலை

(C) மலைபடுகடாம்

(D) மதுரைக் காஞ்சி

**2.** அகப்பொருள் சார்ந்தது.

(A) கார் நாற்பது

(B) களவழி நாற்பது

(C) இன்னா நாற்பது

(D) இனியவை நாற்பது

**3.** நிலையாமை குறித்து எழுந்தது

(A) நெடுநல் வாடை

(B) மதுரைக் காஞ்சி

(C) முல்லைப் பாட்டு

(D) குறிஞ்சிப்பாட்டு

**4.** வலித்தல் விகாரத்தால் பெயர் பெற்றது.

(A) பெரியபுராணம்

(B) சீவகசிந்தாமணி

(C) மணிமேகலை

(D) சிலப்பதிகாரம்

Adda247
GET IT ON Google Play

**5.** ஒரு குடி மன்னர் வரலாறு கூறுவது

(A) புறநானூறு

(B) களவழி நாற்பது

(C) பதிற்றுப்பத்து

(D) பரிபாடல்

**6.** பூதம் என்பதைப் பெயராகப் பெற்றவர்.

(A) ஓர் அரசர்

(B) ஓர் ஆழ்வார்

(C) ஒரு நாயன்மார்

(D) ஓர் அமைச்சர்

**7.** மலைக்கள்ளனை உருவாக்கியவர்

(A) பாரதிதாசன்

(B) நாமக்கல்லார்

(C) கவிமணி

(D) கண்ணதாசன்

**8.** 'சுலோசனா சதி' என்னும் நாடகத்தை ஆக்கியோர்

(A) சுந்தரம் பிள்ளை

(B) பம்மல் சம்பந்த முதலியார்

(C) பரிதிமாற் கலைஞர்

(D) சங்கரதாஸ் சுவாமிகள்

**9.** 'என் கதை' என்னும் சுயசரிதையை எழுதியவர்.

(A) கவிமணி

(B) உ.வே.சா

(C) நாமக்கல் கவிஞர்

(D) பாரதியார்

**10.** சுத்தானந்த பாரதியார் மொழிபெயர்த்த 'ஏழை படும் பாடு' என்னும் நாவலின் மூலமொழி

(A) ஆங்கிலம்

(B) ஜெர்மனி

(C) பிரெஞ்சு

(D) இத்தாலி

**11.** பிசி என்பது.

(A) பழமொழி

(B) விடுகதை

(C) புதிர்

(D) கதை

**12.** பகுபத உறுப்புக்கள்

(A) எட்டு

(B) ஆறு

(C) ஏழு

(D) பதினொன்று

**13.** ஐயனாரிதனார் எழுதியது

(A) வீரசோழியம்

(B) புறப்பொருள் வெண்பா மாலை

(C) வெண்பாப் பாட்டியல்

(D) புறத்திரட்டு

**14.** நேர்பு, நிரைபு அசைகளை அறிமுகம் செய்தவர்

(A) அமுதசாகரர்

(B) பவணந்தி

(C) தொல்காப்பியர்

(D) தண்டியாசிரியர்

Adda247 GET IT ON Google Play

15. சுதேசமித்திரனைத் தொடங்கியவர்

(A) ஜி.சுப்பிரமணிய அய்யர்

(B) திரு.வி.க.

(C) பாரதியார்

(D) வ. வே. சு. அய்யர்

16. 'இளைய பாரதம்' என்னும் நிகழ்வினை நடத்தும் ஊடகம்

(A) தொலைக்காட்சி

(B) வானொலி

(C) திரைப்படம்

(D) செய்தித்தாள்

17. உறுதிக்கூற்று: (உ): ஊரும் திணையும் சேர்ந்துள்ள அகநூல் மதுரைக்காஞ்சி

காரணம்: (கா): நிலையாமையைப் பாடும் நூல்

(A) (உ) சரி; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

18. உறுதிக்கூற்று: (உ): பரிபாடல் இசையால் பெயர்பெற்ற பாடல்

காரணம்: (கா): பரிந்துரைக்கும் பாட்டு

(A) (உ) சரியன்று; (கா) சரி

(B) (உ) சரி; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

Adda247 GET IT ON Google Play

**19.** உறுதிக்கூற்று: (உ): கூடலூர்க் கிழார் பாடியது முதுமொழிக் காஞ்சி

காரணம்: (கா): காஞ்சி மாநகரைப் பற்றிப் பாடிய முதுமொழிகளின் தொகுப்பு

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரியன்று; (கா) சரி

**20.** உறுதிக்கூற்று: (உ): யசோதர காவியம் - பௌத்த நூல்

காரணம்: (கா): கொல்லாமை நீதி கூறுவது

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரியன்று; (கா) சரி

**21.** உறுதிக்கூற்று: (உ): வாகீசர் - தாண்டக வேந்தர் எனப் போற்றப்படுகிறார்

காரணம்: (கா): ஆனந்தத் தாண்டகம் பாடியவர் அவர்

(A) (உ) சரி; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ), (கா) இரண்டும் சரி

**22.** உறுதிக்கூற்று: (உ): முக்கூடற் பள்ளு நாட்டுப்புற இலக்கியச் சார்புடையது

காரணம்: (கா): அரசனையும் கடவுளையும் பாடுவது அது

(A) (உ) சரி; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

Adda247 GET IT ON Google Play

23. உறுதிக்கூற்று: (உ): தொல்காப்பியக் கருத்துப்படி எகர - ஒகரங்கள் புள்ளி பெறும்

காரணம்: (கா): அவை மெய்யெழுத்து

(A) (உ) சரி; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

24. உறுதிக்கூற்று: (உ): மழையும் புயலும் வ.ரா.வின் கட்டுரைத் தொகுப்பு

காரணம்: (கா): மன்னர்களையும் மறையோர்களையும் பற்றி எழுதியது

(A) (உ) சரி; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று; (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

25. உறுதிக்கூற்று: (உ): மீராவின் ஊசிகள், சமுதாய எள்ளல் பொருண்மையது

காரணம்: (கா): அது சமுதாய நோய்களைக் குத்திக் காட்டுகிறது

(A) (உ) சரி; (கா) சரியன்று

(B) (உ), (கா) இரண்டும் சரி

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரியன்று; (கா) சரி

26. உறுதிக்கூற்று: (உ): பயண இலக்கிய முன்னோடி ஏ.கே. செட்டியார்

காரணம்: (கா): அயல் நாட்டுப் பயணம் மேற்கொண்டோரின் அனுபவங்களைத் தொகுத்து முதலில் வெளியிட்டவர் அவரே.

(A) (உ) சரியன்று; (கா) சரி

(B) (உ) சரி; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

Adda247 GET IT ON Google Play

27. நிரல் படுத்துக

ஏறுமுகத்தில் அடியளவுடைய சங்கத்தொகை நூல்கள்.

(A) ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு

(B) குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு

(C) நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு

(D) அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு

28. நிரல் படுத்துக

பரிபாட்டின் உறுப்புகள்

(A) தரவு, எருத்தம், கொச்சகம், அராகம்

(B) தரவு, கொச்சகம், எருத்தம், அராகம்

(C) தரவு, எருத்தம், அராகம், கொச்சகம்

(D) தரவு, அராகம், கொச்சகம், எருத்தம்

29. நிரல் படுத்துக

திருக்குறள் அறத்துப்பாலின் இயல்கள்

(A) பாயிரம், இல்லறவியல், ஊழியல், துறவறவியல்

(B) பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்

(C) பாயிரம், ஊழியல், இல்லறவியல், துறவறவியல்

(D) பாயிரம், ஊழியல், துறவறவியல், இல்லறவியல்

30. நிரல் படுத்துக

திருமுறை நிரலில் சமயக்குரவர்

(A) சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், அப்பர்

(B) சம்பந்தர், சுந்தரர், அப்பர், மாணிக்கவாசகர்

(C) சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், சுந்தரர்

(D) சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்

Adda247 GET IT ON Google Play

**31.** நிரல் படுத்துக

நால் வகை மார்க்கம்

(A) கிரியை, சரியை, யோகம், ஞானம்

(B) கிரியை, சரியை, ஞானம், யோகம்

(C) சரியை, கிரியை, யோகம், ஞானம்

(D) சரியை, யோகம், கிரியை, ஞானம்

**32.** நிரல் படுத்துக

திருக்குறள் பழைய உரையாசிரியர்கள்

(A) தருமர், மணக்குடவர், நச்சர், தாமத்தர்

(B) தருமர், நச்சர், மணக்குடவர், தாமத்தர்

(C) தருமர், தாமத்தர், மணக்குடவர், நச்சர்

(D) தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர்

**33.** நிரல் படுத்துக

ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள்

(A) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி

(B) காப்பு, செங்கீரை, சப்பாணி, தால்

(C) காப்பு, தால், சப்பாணி, செங்கீரை

(D) காப்பு, சப்பாணி, தால், செங்கீரை

**34.** நிரல் படுத்துக

பருவ மகளிர்

(A) மங்கை, மடந்தை, தெரிவை, அரிவை

(B) மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை

(C) மங்கை, அரிவை, மடந்தை, தெரிவை

(D) மங்கை, அரிவை, தெரிவை, மடந்தை

Adda247 GET IT ON Google Play

35. நிரல் படுத்துக

யாப்பியல் உறுப்புகள்

(A) எழுத்து, அசை, தளை, சீர்

(B) எழுத்து, தளை, அசை, சீர்

(C) எழுத்து, சீர், தளை, அசை

(D) எழுத்து, அசை, சீர், தளை

36. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நீரின்றமையா உலகம் போல | (i) | பரிபாடல் |
| (b) | கையில் ஊமன் கண்ணில் காக்கும் வெண்ணெய் உணங்கல் போல | (ii) | குறுந்தொகை |
| (c) | ஆடல் அறியா அரிவை போலவும் | (iii) | புறநானூறு |
| (d) | ஆற்றுவழிப்படூஉம் புணைபோல | (iv) | நற்றிணை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (ii) | (iii) | (i) |
| (B) | (iv) | (ii) | (i) | (iii) |
| (C) | (iv) | (i) | (ii) | (iii) |
| (D) | (iv) | (i) | (iii) | (ii) |

37. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் | (i) | போற்றுதல் |
| (b) | புணர்ந்தாரைப் பிரியாமை | (ii) | பொறை |
| (c) | மறை பிறர் அறியாமை | (iii) | ஆற்றுதல் |
| (d) | போற்றாரைப் பொறுத்தல் | (iv) | செறிவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (ii) | (i) |
| (B) | (iii) | (i) | (ii) | (iv) |
| (C) | (iii) | (i) | (iv) | (ii) |
| (D) | (iii) | (iv) | (i) | (ii) |

Adda247 GET IT ON Google Play

**38.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கண்ணகி | (i) | திட்டியின் விடமன்ன கற்பின் செல்வி |
| (b) | மாதவி | (ii) | மாபெரும் பத்தினி மகள் |
| (c) | சீதை | (iii) | உரைசால் பத்தினி |
| (d) | மணிமேகலை | (iv) | கானற்பாணி இசைத்தவள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (i) | (ii) |
| (B) | (iii) | (iv) | (ii) | (i) |
| (C) | (iii) | (ii) | (iv) | (i) |
| (D) | (iii) | (i) | (ii) | (iv) |

**39.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கவுணியர் | (i) | அப்பர் |
| (b) | மருணீக்கியார் | (ii) | சுந்தரர் |
| (c) | நம்பிஆரூரர் | (iii) | மாணிக்கவாசகர் |
| (d) | வாதவூரர் | (iv) | சம்பந்தர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (i) | (iii) | (ii) |
| (B) | (iv) | (i) | (ii) | (iii) |
| (C) | (iv) | (ii) | (iii) | (i) |
| (D) | (iv) | (iii) | (ii) | (i) |

Adda247

**40.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | திருமூலர் | (i) | எட்டாம் திருமுறை |
| (b) | காரைக்காலம்மையார் | (ii) | பத்தாம் திருமுறை |
| (c) | மாணிக்கவாசகர் | (iii) | ஏழாம் திருமுறை |
| (d) | சுந்தரர் | (iv) | பதினோராம் திருமுறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (iii) | (i) | (iv) |
| (B) | (ii) | (iii) | (iv) | (i) |
| (C) | (ii) | (iv) | (iii) | (i) |
| (D) | (ii) | (iv) | (i) | (iii) |

Adda247 GET IT ON Google Play

**41.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பெருமாள் திருமொழி | (i) | தொண்டரடிப்பொடி |
| (b) | திருவாய் மொழி | (ii) | திருமங்கை |
| (c) | திருமாலை | (iii) | குலசேகரர் |
| (d) | பெரியதிருமொழி | (iv) | சடகோபர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (i) | (ii) | (iv) |
| (B) | (iii) | (i) | (iv) | (ii) |
| (C) | (iii) | (iv) | (i) | (ii) |
| (D) | (iii) | (iv) | (ii) | (i) |

**42.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பருவம் | (i) | சிந்தாமணி |
| (b) | இலம்பகம் | (ii) | சிலம்பு |
| (c) | காதை | (iii) | இராமாயணம் |
| (d) | படலம் | (iv) | பாரதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (i) | (ii) | (iii) |
| (B) | (iv) | (i) | (iii) | (ii) |
| (C) | (iv) | (iii) | (ii) | (i) |
| (D) | (iv) | (iii) | (i) | (ii) |

Adda247

**43.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வாரானை | (i) | தூது |
| (b) | பேரிளம்பெண் | (ii) | பிள்ளைப்பாட்டு |
| (c) | கடைதிறப்பு | (iii) | உலா |
| (d) | பணம் | (iv) | பரணி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (iv) | (i) | (iii) |
| (B) | (ii) | (i) | (iv) | (iii) |
| (C) | (ii) | (iii) | (i) | (iv) |
| (D) | (ii) | (iii) | (iv) | (i) |

Adda247
GET IT ON Google Play

**44.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பாலபாரதி | (i) | திரு. வி. க. |
| (b) | நவசக்தி | (ii) | வ. வே. சு. அய்யர் |
| (c) | மணிக்கொடி | (iii) | கோவிந்தன் |
| (d) | சக்தி | (iv) | சங்கு சுப்பிரமணியன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (i) | (iv) | (ii) |
| (B) | (iv) | (iii) | (i) | (ii) |
| (C) | (ii) | (i) | (iv) | (iii) |
| (D) | (iv) | (ii) | (iii) | (i) |

**45.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | அசோகமித்திரன் | (i) | கோவேறு கழுதைகள் |
| (b) | ராஜம் கிருஷ்ணன் | (ii) | குழந்தைகள், பெண்கள், ஆண்கள் |
| (c) | இமயம் | (iii) | கரிப்புமணிகள் |
| (d) | சுந்தரராமசாமி | (iv) | தண்ணீர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (i) | (iii) | (iv) | (ii) |
| (B) | (ii) | (iv) | (i) | (iii) |
| (C) | (iii) | (ii) | (i) | (iv) |
| (D) | (iv) | (iii) | (i) | (ii) |

Adda247 GET IT ON Google Play

பின்வரும் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.

தமிழ்ப் பெருமக்கள், மேனாட்டோடும் கீழைக் கடல் நாடுகளோடும் பழங்காலத்திலிருந்து பழகி வருபவர்கள். அவர்களுடைய பண்பாட்டுக் குடியேற்றமே கீழைக்கடல் நாகரிகம். அங்கிருந்த பழைய குமேரு மக்கள் முதலியோரின் பண்பாட்டோடு தமிழ்ப்பண்பாடும் சேர்ந்து ஒட்டுச் செடியாகி ஒன்றாக வளர்ந்தபோது முற்றிக் கனியாக அங்கெழுந்த கலைப்பொருள்கள் உலகப் பெருவியப்பாயின. மேனாட்டு யவனரது புலிச்சங்கிலியும் பிறவும் இந்நாட்டில் கலைக்கொரு தூண்டுகோலாக அமைந்தன.

அரிஸ்டாடில் என்ற யவனப் பேரறிஞர் தன் மகனுக்காக எழுதிய அறநூலின் பெயர் நிகமேகியன் எதிக்ஸ் என்பதாம். இதுவே அவ்வறிஞரின் சிறந்த அறநூல் என்று போற்றப்பெறுகிறது. அது காட்டும் வழிதான் என்ன? வாழ்வின் எந்தத் துறையிலும் இரண்டு கோடிகள் உண்டு. உணவு என்றால் பட்டினி ஒரு புறம், விலாப் புடைக்க உண்டு உருளுதல் மற்றொரு புறம். உழைப்பு என்றால் அல்லும் பகலும் உழைப்பது ஒருகோடி; உழைப்பே இன்றிச் சோம்பித் திரிவது என்பது மற்றொரு கோடி. அரிஸ்டாடில் இந்த இரு கோடியில் ஒன்றில் நில்லாமல் இரண்டிற்கும் இடையே நின்று வாழும் நடுநிலை வாழ்வினையே அறவாழ்வு எனப் போற்றுகிறார். இதனைச் சமநிலை என நம் நாட்டு மெய்யுணர்வாளர் கூறுவதோடு ஒப்பிட்டுக் காணலாம். பெருந்தூக்கமான தாமசத்திலும் விழாமல் கடுமுழைப்பான இராசத்திலும் விழாமல் நடுநிலையில் இருப்பதே சாத்துவீகப் பேரின்பநிலை. இரண்டாட்டம் எந்தத் துறையிலும் உண்டு. மெய்யுணர்வாளன் இந்த இரண்டாட்டத்தினின்றும் உயர்ந்து போகின்றான்.

சங்கப் பாக்களைத் துணி வாங்குவோர் துணியை அடிகோலால் அளந்து வாங்குவதுபோல அவற்றின் அடிகளை எண்ணி வகை செய்துள்ளார்கள். 8 அடிக்கு உள்ளானவற்றைக் குறுந்தொகை என்று தொகுத்தனர். 12 அடிக்கு மேலும் 32 அடிக்குள்ளும் அமைந்தவற்றை நெடுந்தொகை என்று தொகுத்தார்கள். இடைப்பட்டவற்றை - நடுநிலையில் உள்ளவற்றை - குறுகியோ நீண்டோ இரு கோடியிலும் சேராது நல்லன என்று அமைந்தவற்றை நற்றிணை என்று தொகுத்தார்கள்.

**46.** தமிழ்ப் பெருமக்கள் பண்பாட்டுக் குடியேற்றம் என்பது

(A) கீழைக்கடல் நாகரிகம்

(B) சிந்து வெளி நாகரிகம்

(C) மேலைக் கடல் நாகரிகம்

(D) சுமேரிய நாகரிகம்

**47.** உறுதிக்கூற்று: (உ): அரிஸ்டாடில் எழுதிய அறநூல் நிகமேகியன் எதிக்ஸ்

காரணம்: (கா): உணவு, பட்டினி ஆகிய இரண்டின் நடுநிலை வாழ்வைக் கூறுகிறது

(A) (உ) சரியன்று; (கா) சரி

(B) (உ) சரி; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ), (கா) இரண்டும் சரி

Adda247

GET IT ON Google Play

**48.** தமிழ்நாட்டில் கலைக்குத் தூண்டுகோலாக அமைந்தது

(A) சீனர் வருகை

(B) ஆங்கிலேயர் வருகை

(C) யவனர் வருகை

(D) கிறித்தவர் வருகை

**49.** 12 அடிக்கு மேல் 32 அடிக்குள் அமைந்த பாடல்கள்

(A) குறுந்தொகை

(B) நெடுந்தொகை

(C) நற்றிணை

(D) புறநானூறு

**50.** நற்றிணை என்பதிலுள்ள 'நல்' என்பதன் பொருள்

(A) நல்ல

(B) நடுநிலையிலுள்ள

(C) பெரிய

(D) சிறிய

Adda247

- o O o -

Space For Rough Work